Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, ஜூலை 18, 2024 | இதழ் 96

# வினாத்தாள் கசிவால் அனைத்து மாணவர்களும் பாதிக்கப்படவில்லை ‘நீட்’ மறுதேர்வு நடத்த உத்தரவிட முடியாது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி அமர்வு உத்தரவு

சென்னை, 18 ஜூலை 2024: நீட் தேர்வு வினாத்தாள் கசிவால் ஒட்டுமொத்த மாணவர்களும் பாதிக்கப்பட்டது உறுதியானால் மட்டுமே மறுதேர்வு நடத்த உத்தரவிட முடியும். எனவே மறுதேர்வு நடத்த முடியாது என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் அமர்வு இன்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

2024ம் ஆண்டுக்கான இளநிலை நீட் தேர்வு கடந்த மே 5ம் தேதி நடைபெற்றது. சுமார் 23.33 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வினை எழுதினர். இதில், வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண் வழங்கிய விவகாரம், ஆள் மாறாட்டம் உள்ளிட்ட முறைகேடுகள் அம்பலமானதால் நீட் தேர்வுக்கு எதிராக நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களுக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளும் போராட்டக்களத்தில் குதித்தன.

இந்த மோசடிகளுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் அடுத்தடுத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நீட் தேர்வை ரத்து செய்துவிட்டு மறுதேர்வு நடத்த அதில் கோரப்பட்டு இருந்தன. நீட் தேர்வு முறைகேடு குறித்து சுமார் 254 மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இதனை அனைத்தையும் ஒருங்கிணைத்து சுப்ரீம் கோர்ட்டில் இன்று தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இந்த அமர்வில் நீதிபதி ஜே.பி. பர்திவாலா, நீதிபதி மனோஜ் மிஸ்ரா ஆகியோர் உள்ளனர். விசாரணையின்போது சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் கூறுகையில், சமூக சீர்கேடுகள் தொடர்பான விவகாரம் என்பதால் நீட் தேர்வுக்கு இந்த நீதிமன்றம் முக்கியத்துவம் வழங்குகிறது. லட்சக்கணக்கான மாணவர்கள் இன்றைய வழக்கு விசாரணைக்காக காத்திருக்கிறார்கள்.

நீட் தேர்வில் குளறுபடி புகார் எழுந்துள்ளதால், கடந்த மாதம் வெளியான நீட் தேர்வு முடிவுகளை ரத்து செய்யவும் முடியாது; அனைத்து மாணவர்களுக்கும் மறு தேர்வை எழுத வேண்டும் என உத்தரவிடவும் முடியாது என்றார்.



மேலும், “நீட் கசிவு திட்டமிட்ட ரீதியில் நடந்துள்ளது என்றும், அது முழு தேர்வையும் பாதித்தது என்றும் கூறும் மனுதாரர்கள், அதனை நம்ப வைக்க முயற்சிக்க வேண்டும்” என்று தெரிவித்த தலைமை நீதிபதி சந்திரசூட், ஆழமான விசாரணை தேவைப்படும் பிரச்சினைகள் எவை என்பதையும் சுட்டிக்காட்டுங்கள் என்று வலியுறுத்தினார்.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதிடுகையில்,

நீட் தேர்வு எழுதிய 23 லட்சம் மாணவர்களுக்கும் நீட் தேர்வை நடத்த வேண்டும் என நாங்கள் கேட்கவில்லை சுமார் 1 லட்சத்து 8 ஆயிரம் மாணவர்கள் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று அவர்கள் மருத்துவ படிப்புகளில் சேர இருக்கிறார்கள் அவர்களுக்கு மட்டும் மறுத்தேர்வு நடத்தினால் போதும் என்றுதான் கேட்கிறோம் என்றார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி சந்திரசூட், வினாத்தாள் கசிவால் ஒட்டுமொத்த மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் நிரூபித்தால் மட்டுமே நீட் தேர்வை ரத்து செய்ய முடியும். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் அனைத்து மாணவர்களுக்கும் மறுதேர்வு நடத்த உத்தரவிட முடியாது என்றார்.

சென்னை ஐஐடி இயக்குனர் தேசிய தேர்வுகள் முகமையின் ஆட்சி மன்ற உறுப்பினராக இருப்பதால், விசாரணை அறிக்கையில் அவரது பங்களிப்பு சந்தேகத்திற்குகுரியது எனவும், சென்னை ஐஐடி வழங்கி உள்ள விசாரணை அறிக்கையை நீதிமன்றம் ஏற்கக் கூடாது என்றும் மனுதாரர்கள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது.

மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த ஆண்டு ஜே.இ.இ தேர்வை சென்னை ஐஐடி நடத்துவதால் அதன் தலைவர் தேசிய தேர்வுகள் முகமையின் குழுவில் இடம் பெற்று இருப்பார். ஆனால் நீட் தேர்வு தொடர்பான அறிக்கையை தயார் செய்த இயக்குனர் குழுவில் இடம் பெறவில்லை என விளக்கமளித்தார். நீட் தேர்வில் முறைகேடு நடக்கவில்லை என சென்னை ஐஐடி விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில் சென்னை ஐஐடியின் விசாரணை அறிக்கையின் ஒரு பகுதியை வெளியிட வேண்டும் என மனுதாரர்கள் வலியுறுத்தினர். இதனை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஏற்க மறுத்தனர்.

## ஈரோடு அருகே ஆம்னி பஸ் தீப்பிடித்து எரிந்தது ஓட்டுநரின் துரித நடவடிக்கையால் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்

சென்னை, 18 ஜூலை 2024: ஈரோடு அருகே தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த தனியார் ஆம்னி பஸ் திடீரென தீப்பற்றி எரிந்த நிலையில், ஓட்டுநரின் துரித நடவடிக்கையால் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.



சென்னை கோயம்பேட்டில் இருந்து கோவை செல்லும் ஆம்னி பேருந்து ஒன்று ஈரோடு அருகே தேசிய நெடுஞ்சாலை வழியாக நேற்று இரவு (புதன்கிழமை) சென்றுகொண்டிருந்தது.

ஓட்டுநர் கார்த்திகேயன் பேருந்தை இயக்கிக் கொண்டிருந்தார். அந்தப் பேருந்தில் பயணித்தவர்களில் சிலர் வரும் வழியில் ஆங்காங்கே இறங்கினர்.

இந்நிலையில், சுமார் 15 பயணிகளுடன் ஈரோடு மாவட்டம் சித்தோடு அருகே தேசிய நெடுஞ்சாலையில், பேருந்து சென்று கொண்டிருந்தபோது, பேருந்தின் முன்பகுதி திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த ஓட்டுநர் கார்த்திக்கேயன், பேருந்தை சாலையோரமாக நிறுத்தியதோடு, உள்ளே இருந்த பயணிகளுக்கு தகவல் தெரிவித்து உடனடியாக அவர்களை வெளியேற்றியுள்ளார்.

ஓட்டுநரின் இந்த துரித நடவடிக்கையால் பயணிகள் அனைவரும் எவ்வித சேதாரமும் இன்றி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். இது குறித்து தகவலறிந்து வந்த சித்தோடு போலீஸார், தீயணைப்பு துறை வீரர்கள் உதவியுடன் பேருந்தில் பற்றி எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்தனர். ஆனால் பேருந்து முற்றிலும் எரிந்து சேதமானது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சித்தோடு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்சல் கானை கொல்ல சத்ரபதி சிவாஜி பயன்படுத்திய ‘புலி நகம்’ லண்டனில் இருந்து நாளை இந்தியா கொண்டு வரப்படுகிறது

சென்னை, 18 ஜூலை 2024: முகலாய தளபதி அப்சல் கானை கொல்வதற்கு சிவாஜி பயன்படுத்திய புலி நகம் நாளை லண்டனில் இருந்து இந்தியா கொண்டு வரப்படுகிறது.



இந்தியாவில் முகலாய அரசர்கள் ஆண்டபோது, கி.பி. 1659 ம் ஆண்டில் பிஜாபூர் சுல்தானின் படை தளபதியாக இருந்தவர் அப்சல் கான். மராட்டியத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவாக இருந்து ஆட்சி செய்தபோது, அவரை தாக்க சூழ்ச்சி நடந்தது. இதனை அவர் அறிந்து கொண்டார். சிவாஜியை அப்சல் கான் தாக்கும்போது, அதற்கு பதிலடியாக புலி நகம் கொண்டு அவரை சிவாஜி தாக்கினார். அன்று முதல் இந்த புலி நகம், நம்பிக்கையின் சின்னமாக பார்க்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில், தற்போது லண்டனில் உள்ள விக்டோரியா அன்ட் ஆல்பர்ட் அருங்காட்சியகத்தில் உள்ளது.

இந்நிலையில், அதனை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான மகாராஷ்டிர அரசு ஈடுபட்டது.

இதன் ஒரு பகுதியாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மியூசிய நிர்வாகிகள் முன்னிலையில் அம்மாநில அமைச்சர் சுதீர் முங்கந்திவார் மற்றும் உதய் சமந்த் ஆகியோர் கடந்த அக்டோபரில் ஏற்படுத்தினர். இதன்படி, இந்த புலி நகம் 3 ஆண்டு காலத்திற்கு இந்தியாவில் வைக்கப்படும்.

இந்தியாவில், சத்ரபதி சிவாஜி முடிசூட்டி 350 ஆண்டுகள் ஆன நிலையில், அதனை இந்தியா கொண்டாடி வருகிறது.

அதன்படி, நாளை இந்த ‘வாக் நாக்’ லண்டனில் இருந்து விமானம் மூலம் இந்தியா கொண்டு வரப்பட்டு மகாராஷ்டிராவின் சதாரா நகரத்தில் உள்ள சிவாஜி அருங்காட்சியத்தில் பாரம்பரிய சடங்குகள் செய்யப்பட்டு வைக்கப்பட உள்ளது. இதற்காக அம்மாநில முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் பிரம்மாண்ட விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த புலி நகத்தை பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மகாராஷ்டிர அமைச்சர் சுதீர் முங்கந்திவார் தெரிவித்துள்ளார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# "என் நண்பனின் நிறைவேறா ஆசை தான் 'நாற்கரப்போர்' உருவாக காரணம்" ; இயக்குநர் ஸ்ரீ வெற்றி



சென்னை, 18 ஜூலை 2024: ஹெச்.வினோத், ராஜபாண்டி உள்ளிட்ட இயக்குநர்களிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவர் இயக்குநர் ஸ்ரீ வெற்றி. தற்போது 'நாற்கரப் போர் படம் மூலமாக இயக்குநராக அடியெடுத்து வைக்கிறார். வி6 பிலிம் பிரைவேட் லிமிடெட் சார்பில் எஸ்.வேலாயுதம் தயாரிப்பில் உருவாகி இருக்கிறது நாற்கரப்போர். வரும் இந்தப்படத்தில் இறுகப்பற்று படம் மூலம் கவனம் பெற்ற நடிகை அபர்ணதி கதாநாயகியாக நடிக்க, படத்தின் மைய கதாபாத்திரமாக சேத்துமான் படத்தில் நடித்த அஸ்வின் நடிக்கிறார். முக்கிய வேடத்தில் காலா, கபாலி புகழ் லிங்கேஸ், வில்லனாக சுரேஷ் மேனன் ஆகியோர் நடிக்கின்றனர். "சதுரங்க விளையாட்டை மையப்படுத்தி இந்த படம் உருவாகி உள்ளது. ஏழை-பணக்காரன், உயர் ஜாதி-தாழ்ந்த ஜாதி என இவர்களுக்கு இடையே காலங்காலமாக இருக்கும் பிரச்சினைகளை சதுரங்க விளையாட்டின் பின்னணியில் இந்த படம் பேசுகிறது. குப்பை அள்ளும் சமுதாயத்தில் இருந்து வந்த ஒருவன் எப்படி 'கிராண்ட் மாஸ்டர்' ஆகிறான் ? அதற்காக அவன் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன என்பது இந்தப்படத்தின் கரு.

தனது முதல் படத்திலேயே விளையாட்டை மையப்படுத்தி கதையை உருவாக்கும் எண்ணம் தனது வாழ்க்கையில் சந்தித்த உண்மை சம்பவத்தின் மூலமாகவே தோன்றியது என இந்தப்படத்தின் கதை உருவான விஷயங்கள் குறித்து நம்மிடம் பகிர்ந்து கொண்டார் இயக்குநர் ஸ்ரீ வெற்றி.

"சிறுவயதிலேயே எனக்கும் என் நண்பனுக்கும் சதுரங்க விளையாட்டில் ஆர்வம் எழுந்தது. என் நண்பன் படிப்பை விட செஸ் விளையாடுவதில் ஆர்வம் செலுத்தினான். எப்படியோ சிறுக சிறுக பணம் சேர்த்து ஒரு செஸ் போர்டு வாங்கி தொடர்ந்து அதில் விளையாடி பயிற்சி பெற்றோம். வீட்டிற்கு தெரியாமலேயே எங்கள் ஊரான திண்டுக்கல்லில் இருந்து மதுரைக்கு சென்று பயிற்சி மையத்தில் சேர முயற்சித்தோம். ஆனால் அங்கே பயிற்சி கட்டணம் அதிகம் என்று கூறி எங்களை திருப்பி அனுப்பி விட்டனர். அன்று வீடு திரும்பியபோது இந்த உண்மையை கண்டுபிடித்து விட்ட எங்களது பெற்றோர் எங்களை அடித்து உதைத்து அந்த செஸ் போர்டையும் தீயிலிட்டு கொளுத்தி விட்டனர்.

ஆனால் என் நண்பன் படிப்பிலும் கவனம் செலுத்த முடியாமல் விளையாட்டையும் விளையாட முடியாமல் மன அழுத்தத்திற்கு ஆளாகி ஒரு கட்டத்தில் லாரியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான். அந்தப் பாதிப்பில் இருந்து நான் மீண்டு வரவே பல நாட்கள் ஆனது. அதேபோல எங்கள் தெருவில் தூய்மை பணியாளராக பணியாற்றும் ஒரு அம்மா எங்கள் வீட்டில் மட்டும் நெருங்கி பழகி வந்தார். ஒரு கட்டத்தில் அவர் இறந்துவிட அவரது இறுதிச் சடங்கை செய்த சில பேரில் நானும் ஒருவன். அவரது மரணமும் என்னை பாதித்தது. அதன் பிறகு சினிமாவுக்கான கதையை நான் உருவாக்கிய போது என் நண்பனின் விளையாட்டையும் தூய்மை பணி செய்த அந்த அன்னையின் கஷ்டங்களையும் ஒன்றாக்கி இந்த நாற்கர போர் கதையை எழுதினேன்.

இந்தியாவில் விளையாட்டுகளை நிர்வகிக்கும் பல கூட்டமைப்புகளும் சங்கங்களும் சுயநல அரசியல் மோதல் நடக்கும் களங்களாக மாறிப்போயிருக்கின்றன. இது எல்லாவற்றையும் கடந்துதான் இந்திய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அதிக வெற்றிகளையும், புகழையும் குவித்து வருகின்றனர். கீழடியில் நடக்கும் அகழ்வாராய்ச்சியில் சூளையில் சுடப்பட்ட சதுரங்க காய்கள் கிடைத்துள்ளது. இந்த காய்களின் ஆயுள் கிட்டதட்ட கி.மு 6-ஆம் நூற்றாண்டு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தவகையில் சதுரங்க விளையாட்டிற்கும் ஆதி தமிழ் நாடாய் திகழ்வதில் இன்னும் பூரிப்பு.

இன்று தமிழக அரசால் ஒலிம்பியாட் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பையும், சிறப்பு கவனத்தையும் சதுரங்க விளையாட்டு பெற்றிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் 24 கிராண்ட் மாஸ்டர்கள் இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியின் உச்சம். மத நல்லிணக்கத்துக்காகவும், மக்களை ஒன்றினைக்கும் கருவியாகவும் விளையாட்டு இருக்கிறது. ஆனால் அந்த விளையாட்டை விளையாடவும், ஒரு விளையாட்டை தேர்தெடுக்கவும் கூட ஒரு தகுதி தேவைப்படுகிறது. இன்றும் எங்கோ ஒரு இடத்தில் தன்னால் விருப்பப்பட்ட விளையாட்டை தேர்தெடுத்து விளையாட முடியாமல் எத்தனையோ பேர் மறைந்து போயிருக்கிறார்கள்.

நாம் இன்றும் கண்டுகொள்ளாத மனிதர்களிடமும் நம்மை போல அனைத்து ஆசைகளும் இருக்கிறது. அதை சொல்லும் படம் தான் 'நாற்கரப்போர்'. இது ஒரு சமூகத்தினருக்கான படம் அல்ல... ஒட்டு மொத்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கானது" என்கிறார் ஸ்ரீ வெற்றி.

நாற்கரப்போர்' படம் ஆகஸ்ட் முதல் வாரத்தில் வெளியிடுவதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

# வசதியற்ற மாணவர்களுக்காக நவீன கணினி ஆய்வகம்: ஓரியன் இன்னோவேஷன் வழங்குகிறது




சென்னை, 18 ஜூலை 2024: டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் பிராடக்ட் உருவாக்க சேவைகள் துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக இயங்கிவரும் ஓரியன் இன்னோவேஷன் ("ஓரியன்") தொழில்நுட்ப கல்வி வழியாக வசதியற்ற ஏழை எளிய மாணவர்கள் திறனதிகாரம் பெறுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய திட்டம் தொடங்கப்படுவதை இன்று பெருமையுடன் அறிவித்திருக்கிறது. பெருநிறுவன சமூக பொறுப்புறுதி (சி எஸ் ஆர்) திட்டத்தின் ஒரு அங்கமாக சென்னை மாநகரில் அம்பத்தூரில் அமைந்துள்ள டிவி நகர் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களின் நலனுக்காக கணினி ஆய்வகத்தை ஓரியன் அமைத்து தந்திருக்கிறது. அரசு நிதிஉதவி பெறும் பள்ளியான இது, அம்பத்தூர் ரோட்டரி கிளப்-ன் ஆதரவோடு இயங்கி வருகிறது. ஓரியன் நிறுவனத்தின் டிஜிட்டல் நிலைமாற்றத்திற்கான குளோபல் டெலிவரி துறையின் தலைவர் திரு. பிரதீப் மேனன், இப்பள்ளியில் கணினி ஆய்வகம் திறக்கப்படுவது குறித்து தனது ஆழமான திருப்தியையும் மற்றும் இந்த சிறப்பான முயற்சியை தொடங்கி செயல்படுத்துவதில் வலுவான பொறுப்புறுதியையும் வெளிப்படுத்தி கூறியதாவது:

"வசதியற்ற ஏழை எளிய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் படிக்கும் இப்பள்ளியில் ஒரு நவீன கணினி ஆய்வகத்தை அவர்களின் தொழில்நுட்ப கல்வி அறிவை மேம்படுத்துவதற்காக நிறுவியிருப்பதில் நாங்கள் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஆய்வகம் மாணவர்களின் திறனை வளர்ப்பதற்கு பெரும் உதவியாக இருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். வார இறுதி நாட்களில் இப்பள்ளியில் ஸ்டெம் பாடங்களை கற்பிப்பதற்கு தன்னார்வத்துடன் முன்வந்திருக்கிற எமது பணியாளர்கள் மற்றும் அவர்களது குழும உறுப்பினர்களின் அர்ப்பணிப்பும், உற்சாகமும் எங்களுக்கு மகிழ்ச்சியையும், அளவில்லாத பெருமிதத்தையும் தருகிறது."

ஓரியன் இன்னோவேஷன் நிறுவனத்தின் நிதியுதவியின் மூலம் நிறுவப்பட்டுள்ள இந்த புதிய கணினி ஆய்வகத்தில் டெஸ்க்டாப் கணினிகள், ஸ்மார்ட்போர்டுகள் மற்றும் குளிர்சாதன யூனிட்கள் உட்பட மேம்படுத்தப்பட்ட கற்றல் வசதிகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இதற்கு முன்புவரை இந்த ஆய்வகத்தில் ஐந்து டெஸ்க்டாப் கணினிகளும் மற்றும் ஒரு எளிய நாற்காலி மற்றும் மேஜை ஆகியவை மட்டுமே இருந்த நிலையில் இப்புதிய கணினி ஆய்வகம் நேர்த்தியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளையும் கொண்டு நவீனமயமாக்கப்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்தில் பெருநிறுவன சமூக பொறுப்புறுதி திட்டத்தை வழிநடத்துபவரும் மற்றும் குளோபல் டெலிவரிக்கான துணைத்தலைவர் திரு. ரமேஷ் பாபு முத்துவேல், பேசுகையில், "ஒவ்வொரு குழந்தையும் அதன் சமூக/பொருளாதார நிலை எதுவாகயிருப்பினும் இந்த டிஜிட்டல் யுகத்தில் முன்னேறுவதற்கும், வெற்றி காண்பதற்கும் சிறப்பான கல்வி வாய்ப்புகளை பெற வேண்டும். சமூகத்திற்கு பயனளிக்கும் பங்களிப்பை வழங்கும் ஒரு முயற்சியாக இந்த நவீன கணினி ஆய்வகத்தை தொடங்குவதில் நாங்கள் உண்மையிலேயே பெருமிதம் கொள்கிறோம். வசதியற்ற மாணவர்கள் திறனதிகாரம் பெறுவதற்கான இந்நடவடிக்கையை மேற்கொள்வது எங்களுக்கு அதிக திருப்தியளிக்கிறது" என்று கூறினார்.

ஓரியன் இன்னோவேஷன் எம்பவர் என்பது, இந்நிறுவனத்தின் முதன்மையான சி எஸ் ஆர் முன்னெடுப்பு திட்டமாகும். நம் நாட்டில் வசதியற்ற சமூகத்தினருக்கு தரமான கல்வி மற்றும் தொழில்நுட்ப ஆதாரவளங்களுக்கு அணுகுவசதியை வழங்கி அவர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். கற்றலுக்கான சூழல்களை மேம்படுத்துவதும் மற்றும் இந்த டிஜிட்டல் யுகத்தில் முன்னேற்றம் காண்பதற்கு அவசியமான திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதும் இந்த முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களின் நோக்கமாகும். ஓ ஐ எம்பவர் திட்டத்தின் வழியாக, சமுதாயத்தின் மீது நீடித்து நிலைக்கிற, நேர்மறையான தாக்கத்தை உருவாக்கும் செயற்பணியில் அதன் அர்ப்பணிப்பை ஓரியன் இன்னோவேஷன் மீண்டும் உறுதி செய்கிறது.

# காளி வெங்கட் கதையின் நாயகனாக நடிக்கும் 'அப்பனே முருகா'

சென்னை, 18 ஜூலை 2024: ஒரு கஷ்டம் என வரும்போது பலரும் 'அப்பனே முருகா' என அழைத்து தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்துவது உண்டு. தற்போது 'அப்பனே முருகா' என்கிற டைட்டிலிலேயே ஒரு படம் தயாராகிறது.

ட்ரூ டீம் என்டர்டைன்மெண்ட் சார்பில் ஆர்.சதீஷ் தங்கம், ஆர்.ஜி.சேகர் மற்றும் சசிகுமார் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தை இயக்குவதன் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார் குரு ராமசாமி. இவர் மறைந்த இயக்குநர் ராசு மதுரவனிடம் இணை இயக்குநராக பணியாற்றியவர்.

காளி வெங்கட் கதையின் நாயகனாக நடிக்கும் இந்த படத்தில் சரவணன் (சித்தப்பு), எம்.எஸ் பாஸ்கர், முனீஸ்காந்த், மதுமிதா, ஜானகி (கர்ணன்) சூப்பர்குட் சுப்பிரமணி, மோகனசுந்தரம் புதுவை பூபாலன் (டாணாக்காரன்) ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். பல சர்வதேச விருதுகளை வென்ற 'கிடா' படத்திற்கு ஒளிப்பதிவு செய்த ஜெயபிரகாஷ் இந்தப்படத்தின் ஒளிப்பதிவை மேற்கொள்கிறார்,



அப்பன் தோற்ற ஊரில் பிள்ளைகள் ஜெயிக்க முடியாது என்று ஒரு பழமொழி சொல்லப்படுவது உண்டு. ஆனால் அப்படி தனது ஊரில் ஆன்லைன் ரம்மி விளையாட்டில் தோற்ற ஒருவன் அதிலிருந்து மீண்டு வாழ்க்கையில் ஜெயித்தானா, அவனது பிள்ளைகள் வாழ்க்கை என்ன ஆச்சு என்பதை அடிப்படையாக வைத்து இந்த படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது. படம் பற்றி இயக்குநர் குரு ராமசாமி கூறியதாவது, இன்று பலகுடும்பங்கள் இந்த ஆன்லைன் ரம்மியால் தெருவிற்கு வந்துவிடுகின்றன. கண்ணுக்குத் தெரியாமல் பல குடும்பங்கள் சிதைந்து போகின்றன. நேசமும் பாசமும் தொலைந்து போகின்றன. இந்த வலை அவ்வளவு எளிதாகப் பின்னப்படுகிறது ஆசை வார்த்தைகளால். விழுந்த பின்பு வெளியேற இயலாத மாய வலை இது. இதை செண்டிமெண்ட் நகைச்சுவை கலந்து தருகிறோம். "அப்பனே முருகா" படப்பிடிப்பு நடந்து வருகிறது என்றார். சென்னையில் பூஜையுடன் படப்பிடிப்பு துவங்கி நடைபெற்று வருகிறது. அடுத்து அம்பாசமுத்திரம், பொள்ளாச்சி, கேரளா ஆகிய பகுதிகளில் நடைபெற இருக்கிறது. நடிகர்கள் ; காளி வெங்கட், சரவணன் (சித்தப்பு), எம்.எஸ் பாஸ்கர், முனீஸ்காந்த், மதுமிதா, ஜானகி (கர்ணன்) சூப்பர்குட் சுப்பிரமணி, மோகனசுந்தரம் புதுவை பூபாலன் (டாணாக்காரன்

தொழில்நுட்பக் கலைஞர்கள் ; இயக்குநர் ; குரு ராமசாமி, ஒளிப்பதிவாளர் ; 'கிடா' புகழ் ஜெயபிரகாஷ். படத்தொகுப்பு ; ராமர், சண்டை பயிற்சி ; இளங்கோ, மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சென்னை பள்ளிகளில் 4, 5-ம் வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா: மேயர் பிரியா கொடியசைத்து துவக்கினார்



சென்னை, 18 ஜூலை 2024: நடப்பு கல்வியாண்டில் சென்னை பள்ளிகளில் 4 மற்றும் 5 ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லும் வாகனங்களை மேயர் ஆர்.பிரியா இன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இச்சுற்றுலாவானது திருவொற்றியூர் மண்டலம் (மண்டலம் - 1) தொடங்கி வாரந்தோறும் மண்டலம் வாரியாக சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் உள்ள சென்னை தொடக்கப் பள்ளிகளில் பேருந்துக்கு சுமார் 55 மாணவர்கள் வீதம், பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தமிழ்நாடு அரசின் மாநகர போக்குவரத்துக் கழகம் மூலமாக முதற்கட்டமாக ரூ.31.29 லட்சம் மதிப்பில் 298 பேருந்துகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக அழைத்துச் செல்லப்படும் இந்தக் கல்விச் சுற்றுலாவில் மொத்தம் 18 சென்னை தொடக்கப் பள்ளிகளைச் சார்ந்த 1255 மாணவர்கள் மற்றும் ஒரு பேருந்திற்கு 4 ஆசிரியர்கள் என 24 பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள சென்னை சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், அண்ணா நூற்றாண்டு நூலகம், சிக்னல் பார்க், காவலர் அருங்காட்சியகம் (போலீஸ் மியூசியம்), வண்டலூர் உயிரியல் பூங்கா, பெரம்பூர் ரெயில் அருங்காட்சியகம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இந்தக் கல்விச் சுற்றுலா மூலம் மாணவர்களுக்கு கல்வி மற்றும் பொதுஅறிவு சிந்தனையுடன் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் உருவாக்கப்படும். இந்த தொடக்கப்பள்ளி மாணவர்களின் கல்விச் சுற்றுலாவானது டிசம்பர் கடைசி வாரத்தில் முடிவடையும்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (கல்வி) ஷரண்யா அறி, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), கல்வி அலுவலர் வசந்தி, உதவி கல்வி அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எச் சி எல் சைக்ளோதான் இன் இரண்டாவது பதிப்பிற்கு சென்னை தயாராகிறது



சென்னை, 18 ஜூலை 2024: உலகளாவிய முன்னணி நிறுவனமான எச் சி எல் குழுமம், எச் சி எல் சைக்ளோதான் சென்னை 2024 இன் இரண்டாவது பதிப்பை இன்று அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. நிகழ்வு விவரங்கள் மற்றும் பதிவு செயல்முறையை வெளியிட்டு, எச் சி எல் சைக்கிள் ஓட்டும் ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளது. 5000 க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுநர்களின் பங்கேற்புடன் நொய்டாவில் இரண்டு வெற்றிகரமான பதிப்புகள் மற்றும் சென்னையில் ஒரு பதிப்பைத் தொடர்ந்து, எச் சி எல் சைக்ளோதான் சென்னை 2024 அக்டோபர் 6, 2024 அன்று மாயாஜால் மல்டிபிளெக்ஸில் தொடங்குகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (எஸ் டி ஏ டி) மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் கீழ் நடத்தப்படும் இந்த நிகழ்வானது, 33 லட்சம் ரூபாய் மதிப்பிலான பரிசுத்தொகையை வழங்குகிறது. செப்டம்பர் 22, 2024 வரை பதிவுகள் திறந்திருக்கும். மேலும் விவரங்களுக்கு, **www.â„ câ™cyclothon.com** ஐப் பார்வையிடவும்

தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல்யா மிஸ்ரா (ஐஏஎஸ்), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (எஸ்டிஏடி) உறுப்பினர் செயலாளர் மேகநந்தா ரெட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். எச் சி எல் சைக்ளோதான் சென்னையின் இரண்டாவது பதிப்பை அறிவிக்க, ஆசிய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் மனிந்தர் சிங் மற்றும் எச் சி எல் கார்ப்பரேஷனின் வியூகத் தலைவர் சுந்தர் மகாலிங்கம் போன்ற உயரதிகாரிகளும் விழாவை சிறப்பித்தனர்.

இந்த பதிப்பின் கருப்பொருள் #சேன்ஜ்யுவர்கியர் என்பது சைக்கிள் ஓட்டுதலின் ஆற்றலை வலியுறுத்துகிறது மற்றும் தனிநபர் நல்வாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையில் அதன் நேர்மறையான தாக்கத்தை வலியுறுத்துகிறது. எச் சி எல் சைக்ளோதான் சென்னையின் முந்தைய பதிப்பு அக்டோபர் 2023 இல் நடைபெற்றது மற்றும் ஈ சி ஆர் சாலையில் 1100 க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர். எம் ஜி எம் டிஸ்ஸி வேர்ல்ட், தனலட்சுமி சீனிவாசன் பொறியியல் கல்லூரி மற்றும் முட்டுக்காடு டகு இல்லம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாதையை உள்ளடக்கிய மாயாஜால் மல்டிபிளெக்ஸில் பந்தயம் தொடங்கி முடிவடையும்.

வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்ட தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல்யா மிஸ்ரா கூறுகையில் , “எச்.சி.எல் சைக்ளோதானின் இரண்டாவது பதிப்பை சென்னையில் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இத்தகைய முயற்சிகள் மூலம் விளையாட்டு மற்றும் உடற்தகுதியை மேம்படுத்துவதில் எச் சி எல் இன் அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது. இந்த நிகழ்வு சமூக உணர்வையும், விளையாட்டுத் திறனையும் வளர்ப்பது மட்டுமல்லாமல், நமது நகரத்தின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கும் பங்களிக்கிறது. விளையாட்டில் தீவிரமாக பங்கேற்பதை ஊக்குவிப்பதன் மூலம், சென்னையின் வளர்ச்சியில் எச் சி எல் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்த எச் சி எல் குழுமத்தின் வியூகத்தின் தலைவர் திரு. சுந்தர் மகாலிங்கம், “சைக்கிள் ஓட்டும் கலாச்சாரத்தை வளர்ப்பதன் மூலம், தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் ஒன்றிணைந்து, சுறுசுறுப்பாக இருக்கவும், பசுமையான, ஆரோக்கியமான சூழலுக்கு பங்களிக்கவும் நாங்கள் விரும்புகிறோம். உண்மையிலேயே எங்கள் பிராண்ட் 'மனித ஆற்றல் பெருக்கப்பட்டது'.என்ற உயர்த்த நோக்கத்தை உள்ளடக்கியது, எச் சி எல் சைக்ளோதான் மூலம், சைக்கிள் ஓட்டுதலை ஒரு விளையாட்டாக மட்டும் அல்லாமல் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அவர்களின் வழியாக எடுத்துக் கொள்ள மக்களை ஊக்குவிப்பதன் மூலம், இந்தியாவில் சைக்கிள் ஓட்டும் தன்மையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

ஆசிய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் திரு. ஓன்கர் சிங் கூறுகையில், "சைக்கிள் ஓட்டத்தை ஒரு வாழ்க்கை முறை மற்றும் போட்டி விளையாட்டாக ஊக்குவிப்பதில் எங்களின் கூட்டு முயற்சிகள் உண்மையிலேயே பாராட்டத்தக்கவை. இந்தியாவில் சைக்கிள் ஓட்டுதலின் எழுச்சி ஊக்கமளிக்கிறது. மற்றும் எச் சி எல் இன் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுடன், நாட்டில் விளையாட்டுக்கான பிரகாசமான மற்றும் அற்புதமான எதிர்காலத்தை எதிர்பார்க்கிறோம்." இந்தியாவின் சைக்கிள் ஓட்டுதல் கூட்டமைப்பு, இந்தியாவில் சைக்கிள் பந்தயத்தின் தேசிய நிர்வாகக் குழுவானது அவர்களின் அறிவு மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.

இந்த நிகழ்வானது தொழில்முறை மற்றும் அமெச்சூர் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு அவர்களின் திறமையை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் இந்தியாவில் ஒரு விளையாட்டாக சைக்கிள் ஓட்டுவதற்கு புதிய தலைமுறையை ஊக்குவிக்கிறது.

# கறந்தபால் மடி புகாது; கருவாடு மீன் ஆகாது சசிகலாவுக்கு அ.தி.மு.க.வில் இடமில்லை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி



சென்னை, 18 ஜூலை 2024: கறந்த பால் மடி புகாது, கருவாடு மீன் ஆகாது. அண்ணா தி.மு.க.வில் சசிகலாவுக்கு இடமில்லை என்று முன்னாள் அமைச்சரும், எதிர்க்கட்சி துணைத்தலைவருமான ஆர்.பி. உதயகுமார் திட்டவட்டமாக கூறினார்.

கடந்த தேர்தலில் அரசியலில் விட்டு ஒதுங்கி கொள்கிறேன் எனக் கூறிய சசிகலா தற்போது மீண்டும் அரசியல் குதிக்கிறேன் என சொல்கிறார். ஜெயலலிதாவின் பின்புலத்தைக் காட்டி சசிகலா தன்னை வளர்த்துக் கொண்டாரே தவிர மக்களுக்காக எதுவும் செய்ததில்லை என்றும் ஆர்.பி. உதயகுமார் கூறியுள்ளார்.

"தி.மு.க. ஆட்சியில் அரங்கேறி வரும் கள்ளச்சாராய உயிரிழப்பு மற்றும் போதைப் பொருட்கள் நடமாட்டம் குறித்து, தமிழகம் முழுவதும் அண்ணா தி.மு.க. சார்பில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஜெயலலிதா பேரவை மற்றும் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் மதுரை மேற்கு (தெற்கு) ஒன்றியம் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி சமயநல்லூரில் இன்று நடைபெற்றது.

இதற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் மலையாளம் முன்னிலை வகித்தார். விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மகேந்திரன், மாணிக்கம், கருப்பையா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அப்போது அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர் பேசியதாவது: -

இன்றைக்கு தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது, நாட்டில் உள்ள அவலங்களை பற்றி சட்டசபையில் பேச முயன்றால் தூக்கி எறிகிறார்கள். தமிழ்நாட்டில் நடைபெறும் கள்ளச்சாராயம், போதை பொருள் கடத்தல் குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை 38 வருவாய் மாவட்டங்களில் பட்டி தொட்டி எங்கும் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய பகுதிகளில் பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க தொண்டர்கள் பொதுமக்களுக்கு நேரில் வழங்கி பிரசாரம் செய்து வருகிறார்கள்.

தமிழகத்தில் ஆண்டுக்கு ஒரு முறை மின் கட்டணத்தை உயர்த்துகிறார்கள். உயர்த்திய மின் கட்டணத்திற்கு வருத்தம் தெரிவிக்காமல், அதனை நியாயப்படுத்துகிறார்கள். 8 ஆண்டுகள் மின்சார கட்டணத்தை உயர்த்தாத அரசு அண்ணா தி.மு.க. அரசு. மரக்காணம் பகுதியில் 2023 ம் ஆண்டு கள்ளச்சாராயம் குடித்து 23 பேர் பலியான அன்று, இதுபோன்ற சம்பவம் இனிமேல் நடைபெறாது என்றார் ஸ்டாலின். அது வெறும் அறிவிப்போடு நின்றுவிட்டது.

கடந்த தேர்தலில் அரசியலில் விட்டு ஒதுங்கி கொள்கிறேன் எனக் கூறியவர் தற்போது மீண்டும் அரசியல் குதிக்கிறேன் என சொல்கிறார்? இதில் எதை ஏற்றுக்கொள்ள வேண்டும்? ஜானகி அம்மாள் எடுத்த முடிவை முன்மாதிரியாக கொண்டு சசிகலா செயல்பட்டால் இரண்டு கோடி தொண்டர்களும் பலன் அடைவார்கள் என எடப்பாடி கூறியதை அவர்கள் செய்தால் நன்றாக இருக்கும்.

கறந்த பால் மடி புகாது, கருவாடு மீன் ஆகாது என்பது போல மீண்டும் அண்ணா தி.மு.க.வில் சசிகலாவை சேர்த்துக்கொள்ள மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# முன்னுரிமை வாரண்டுகள் வெளியீடு வழியாக ரூ. 2705 கோடி நிதி திரட்டல் திட்டத்திற்கு பிசி ஜூவல்லர்-ன் இயக்குநர்கள் குழு ஒப்புதல்

PCJ
Jeweller for generations
PC Jeweller

சென்னை, 18 ஜூலை 2024: இந்தியாவில் அதிவேகமாக வளர்ச்சி கண்டு வரும் ஆபரண ரீடெய்ல் சங்கிலி தொடர் நிறுவனங்களுள் ஒன்றான பிசி ஜூவல்லர் லிமிடெட் - ன் இயக்குநர்கள் குழு, 2024 ஜுலை 13 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் முற்றிலும் மாற்றத்தக்க வாரண்டுகளின் முன்னுரிமை வெளியீடு வழியாக ரூ. 2705 கோடி என்ற தொகையை மூலதனமாக திரட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. ஒரு வாரண்ட்டுக்கு ரூ. 56.20 என்பது இந்த வெளியீட்டு விலையாக இருக்கும். எனினும், இந்த வாரண்ட்டுகள் வெளியீடு, நிறுவனத்தின் பங்குதாரர் உறுப்பினர்களது ஒப்புதலுக்கும் மற்றும் பிற சட்டரீதியான, ஒழுங்குமுறை அமைப்புகளின் ஒப்புதலுக்கும் மற்றும் ஐசிடிஆர் ஒழுங்குவிதிகள், பொருந்தக்கூடிய பிற சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும். இந்நிறுவனத்தின் புரோமோட்டர் குழுமமான நியூஸ் டிராக் கார்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், பல்ராம் கார்க் (எச் யூ எஃப்) மற்றும் பூஜா கார்க் ஆகியோர் இந்த வாரண்ட்டுகளை பெறுகின்ற ஒதுக்கீட்டு நபர்களுள் சிலராவர். மேலும் புரோமோட்டர் அல்லாத வகையினத்திற்குள் ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்களுள் எலரா இந்தியா ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு, கேப்ரி குளோபல் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட், ஏரிஜ் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்டு ஆகியவையும் இடம்பெறுகின்றன. புதுடெல்லியின் கரோல் பாக் பகுதியில் தனது முதல் ஷோரூமை 2005-ம் ஆண்டில் திறந்ததிலிருந்து பிசி ஜூவல்லர் லிமிடெட் அதன் வெற்றிகர பயணத்தை தொடங்கியிருந்தது. மிக நேர்த்தியான ஆபரணங்கள் வழியாக நளினம், கவர்ச்சி மற்றும் ஸ்டைல் என்ற சொற்றொடர்களை ஆபரண உலகில் மறுவரையறை செய்வது இந்நிறுவனத்தின் திட்டமாக இருந்தது. இன்றைக்கு இந்தியாவில் 17 மாநிலங்களில் எண்ணற்ற நகரங்களில் ஷோரூம்களை கொண்டிருக்கும் பிசி ஜூவல்லர், மிக வேகமாக வளர்ந்து வரும் ஆபரண ரீடெய்ல் சங்கிலித்தொடர் நிறுவனங்களுள் ஒன்றாக புகழ் பெற்றிருக்கிறது.

தொடங்கப்பட்ட நாளிலிலிருந்து ஆபரண வடிவமைப்பில் ஒரு முன்னோடியாக பிசி ஜூவல்லர் இருந்து வருகிறது. இதன் ஒவ்வொரு ஆபரணத் தயாரிப்பும் மிக நேர்த்தியாக, கலைப் படைப்பைப் போல உருவாக்கப்படுகின்றன. திருமணத்திற்கான ஆபரணங்களின் தொகுப்பாகவோ அல்லது மிதமான விலைகளில் தினசரி அணியக்கூடிய நகைகளாகவோ எப்படியிருப்பினும், நிகரற்ற தரத்துடன் அற்புதமான டிசைன்களில் ஆபரணங்களை பிசி ஜூவல்லர்ஸ் தொடர்ந்து நிலையாக தயாரித்து வழங்கி வருகிறது. கடந்த பல ஆண்டுகள் கால அளவின்போது காலத்தைக் கடந்து நிலைத்து நிற்கும் இந்த ஆபரணங்கள், நெருக்கமான இனிய தருணங்களை என்றும் நினைவில் வைத்து ஆயுள் காலம் முழுவதிலும் போற்றக்கூடிய அனுபவங்களாக மாற்றியிருக்கின்றன. நகரங்களின் மிக முக்கியமான அமைவிடங்களில் பெரிய வடிவிலான, தனித்து நின்று செயல்படும் ஷோரூம்களை நிறுவுவது மீது பிசி ஜூவல்லர்-ன் பிசினஸ் மாடல் கவனம் செலுத்தி வருகிறது. அனைத்து விலைகளிலும் பல்வேறு வகையான ஆபரணங்களின் தொகுப்பை இந்த ஸ்டோர்கள் வழங்குகின்றன. வைர ஆபரணங்கள் மீது இந்த ஸ்டோர்கள் அதிக கவனம் செலுத்துகின்றன. ஹால்மார்க் முத்திரை கொண்ட ஆபரணங்கள் மற்றும் சான்றளிக்கப்பட்ட வைரங்களை மட்டுமே விற்பனை செய்வதில் உறுதியாக இருக்கும் இந்நிறுவனம், நிகரற்ற தரம் மற்றும் தூய்மையை உறுதி செய்கிறது. இந்த அர்ப்பணிப்பும், வெளிப்படைத்தன்மையும் மற்றும் வாடிக்கையாளருக்கு தோழமையான கொள்கைகளும் ஒருங்கிணைந்து இந்நாட்டில் மக்களின் நம்பிக்கையையும், மரியாதையையும் பெற்ற சிறப்பான பிராண்டாக பிசி ஜூவல்லர்-ஐ நிலைநிறுத்தியிருக்கிறது.

# சாம்ராஜ் டீ எஸ்டேட் 'மாஸ்டர் பிளெண்ட்,' 'மாஸ்டர் பிளெண்ட் இஞ்சி டீ,' 'மாஸ்டர் பிளெண்ட் லெமன் டீ' ஆகிய புதிய நீலகிரி தேநீர் வகைகளை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 18 ஜூலை 2024: 1922-இல் நிறுவப்பட்ட யுனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்ஸ் & கம்பெனி லிமிடெட்டின் பிரீமியம் நீலகிரி தேநீர் பிராண்டான சாம்ராஜ், அதன் 'மாஸ்டர் பிளெண்ட்' தேநீர் வகையையும் தனது பிரபல சி டி சி பிராண்டான 'மாஸ்டர் பிளெண்ட் சி டி சி டீ'யின் கீழ் இரண்டு புதிய தேநீர் வகைகளையும் உற்சாகமாக அறிமுகப்படுத்துகிறது. தேநீர் ஆர்வலர்கள் இப்போது புதிய 'மாஸ்டர் பிளெண்ட் இஞ்சி' மற்றும் 'மாஸ்டர் பிளெண்ட் லெமன்' சுவைகளை ருசித்து மகிழலாம்.

சாம்ராஜின் புதிய மாஸ்டர் பிளெண்ட் சி டி சி தேநீர் நாடு முழுவதும் உள்ள தேநீர்ப் பிரியர்களின் பரந்துபட்ட விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும். திடமான மற்றும் செழுமையான இக்கலவையானது, பாலுடனும் சர்க்கரையுடனும் இணைந்து ஒரு கச்சிதமான சுவையை அளிக்கிறது. மாஸ்டர் பிளெண்ட் சி டி சி, 500 கிராம், 250 கிராம் ஆகிய பேக்கெட் அளவுகளில் முறையே ரூ.175 மற்றும் 95 என்ற விலைகளில் கிடைக்கிறது. ஏராளமான ஆரோக்கிய நன்மைகளை அளிக்கும் தேநீர் வகைகளில் ஒரு புதுவரவாக, 'மாஸ்டர் பிளென்ட் இஞ்சி' வேரியன்ட் இந்த விறுவிறுப்பான காரமான இஞ்சி சுவையை அறிமுகப்படுத்துகிறது. மாஸ்டர் பிளெண்ட் ஜிஞ்சர், 250 கிராம் பாக்கெட் அளவில் ரூ.210 என்ற விலையில் கிடைக்கிறது. 'மாஸ்டர் பிளென்ட் லெமன்' வேரியன்ட் புதிய எலுமிச்சையின் சுவையை உயர்தர தேநீருடன் கலந்து புத்துணர்ச்சியூட்டும் ஒரு தனித்துவமான சுவை அனுபவத்தை வழங்குகிறது. மாஸ்டர் பிளெண்ட் லெமன், 250 கிராம் பாக்கெட் அளவில் ரூ.210 என்ற விலையில் கிடைக்கிறது. சாம்ராஜ் தேயிலையின் சிங்கிள் எஸ்டேட் ஆர்த்தடாக்ஸ் தேநீர், ப்ரோக்கன் ஆரஞ்சு பெக்கோ, தனது உயர்ந்த தரத்திற்கும் நறுமண செழுமைக்கும் புகழ்பெற்றது. உலகின் மிக உயர்ந்த தேயிலைத் தோட்டங்களில் இருந்து பெறும் உண்மையான தேநீரின் சுவையைத் தக்கவைத்துக்கொண்டுள்ள இது பாலுடனும் சர்க்கரையுடனும் நன்றாகக் கலந்து ஒரு செழுமையான, முழுமையான சுவையைத் தருகிறது. சாம்ராஜ் டீ - ன் சிங்கிள் எஸ்டேட் ஆர்த்தாடாக்ஸ் டீ, புரோக்கன் ஆரஞ்ச பெக்கோ, 500 கிராம், 250 கிராம் என்ற பாக்கெட் அளவுகளில் முறையே, ரூ.190 மற்றும் ரூ.110 என்ற விலையில் கிடைக்கின்றன. "நமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நீலகிரித் தேநீர் வகைகளைக் கொண்டுவருவதில் சாம்ராஜ் டீ எஸ்டேட் எப்போதுமே மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. எங்களது புதிய மாஸ்டர் பிளென்ட் வகைகளான இஞ்சி, எலுமிச்சை ஆகியவை தரத்திற்கும் புதுமைக்கும் நாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்புக்குச் சான்றாக விளங்குபவையாகும்" என்று யுனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்ஸ் கம்பெனி லிமிடெட் துணைத் தலைவர் ஷிலாஜித் ராய் சவுத்ரி குறிப்பிட்டார்.

இந்தியாவின் அதிக-வளர்ச்சி கொண்ட தோட்டங்களில் பயிரிடப்படும் சாம்ராஜ் டீ, பல்வேறு வகையான கருப்பு, பச்சை, ஓலாங் ஆர்த்தடாக்ஸ் தேநீர் வகைகளை வழங்குகிறது. நெறிமுறை சார்ந்த தேயிலை உற்பத்தியில் முன்னோடியாக, 1994-இல் ஃபேர்ட்ரேட் சான்றிதழைப் பெற்ற சாம்ராஜ் இந்தியாவின் முதல் ஃபேர்ட்ரேட் நிறுவனங்களில் ஒன்றாகும்.

சாம்ராஜ் டீ எஸ்டேட், தேநீர் அருந்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கெனவும், பிரீமியம் தேநீர் வகைகளை எளிதான ஆன்லைன் டெலிவரி தெரிவுகளுடன் தொடர்ந்து வழங்கி வருகிறது. இஞ்சி மற்றும் எலுமிச்சை சுவைகளை உள்ளிட்ட புதிய மாஸ்டர் பிளெண்ட் தேநீர் வகைகள், இப்போது chamrajchai.com மற்றும் Amazon, போன்ற முன்னணி மின் - வர்த்தக தளங்களில் கிடைக்கின்றன.

# வர்மா ஃபிலிம் ஃபேக்டரிஸ் தயாரிப்பில் மிதுன் சக்ரவர்த்தி எழுதி, இயக்கி நடிக்கும் புதுமையான காதல் திரைப்படம்



சென்னை, 18 ஜூலை 2024: திரைத்துறை மீது மிகுந்த ஆர்வம் கொண்ட திறமை வாய்ந்த புதுமுகமான மிதுன் சக்கரவர்த்தி புதுமையான கதைக்களம் கொண்ட காதல் திரைப்படம் ஒன்றை எழுதி இயக்குவதோடு முதன்மை வேடத்தில் நடிக்கிறார். வர்மா ஃபிலிம் ஃபேக்டரிஸ் பேனரில் இப்படத்தை இவரே தயாரிப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் பெயரிடப்படாத இந்த திரைப்படத்தில் ஹரிணி சுரேஷ் மற்றும் ஸ்வேதா அபிராமி நாயகிகளாக நடிக்கின்றனர். இதர நடிகர்களின் தேர்வு நடைபெற்று வரும் நிலையில், சில பிரபல நட்சத்திரங்களும் இதில் நடிக்க உள்ளனர். திரைப்படம் குறித்து பேசிய தயாரிப்பாளர், இயக்குநர் மற்றும் நாயகனான மிதுன் சக்கரவர்த்தி, "திரை உலகில் இதுவரை சொல்லப்படாத வகையில் மிகவும் புதுமையான காதல் கதையாக இது இருக்கும். சுவாரசியத்திற்கு பஞ்சம் இல்லாத வகையில் உணர்ச்சிகளின் கவின்மிகு கலவையாக இந்த திரைப்படம் உருவாகும்," என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர், "இம்மாத இறுதியில் படப்பிடிப்பை தொடங்க உள்ளோம். படப்பிடிப்பை தொய்வில்லாமல் தொடர்ந்து நடத்தி நிறைவு செய்து விரைவில் படத்தை திரைக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளோம்," என்று கூறினார். வர்மா ஃபிலிம் ஃபேக்டரிஸ் நிறுவனத்தின் முதல் தயாரிப்பான இந்த திரைப்படத்திற்கு அமர்கீத் இசையமைக்க வெற்றிவேல் ஒளிப்பதிவை கையாளுகிறார். புவன் படத்தொகுப்பிற்கு பொறுப்பேற்றுள்ளார். கலை இயக்குநர்: பிரேம்; நடனம்: வரதா மாஸ்டர்; டிசைனர்: கிப்சன் யுகா; மேலாளர்: பெருமாள்; மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

வர்மா ஃபிலிம் ஃபேக்டரிஸ் தயாரிப்பில் மிதுன் சக்ரவர்த்தி எழுதி, இயக்கி நடிக்கும் திரைப்படத்தின் தலைப்பு மற்றும் இதர நடிகர்கள் குறித்த விவரங்கள் வெகு விரைவில் வெளியிடப்படும்.

# அதுல்யா சீனியர் கேர் நடத்திய ஒரு நாள் பயிலரங்கு: பயணத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளுதல்



சென்னை, 18 ஜூலை 2024: அதுல்யா சீனியர் கேர் தனது மதுரவாயல் வளாகத்தில், ஞாயிற்றுக்கிழமை, 14 ஜூலை 2024 அன்று "பயணத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளுதல்": இறப்பை எதிர்கொள்ளுதல் என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கு நிகழ்வை நடத்தியது. வாழ்க்கையின் இறுதி காலத்தின்போது அறிந்திருக்க வேண்டிய புரிதல் மற்றும் திறன்களை ஆழமாக்க உதவும் இந்த நிகழ்வில் 50 நபர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். காலை 8:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை நடைபெற்ற இந்த பயிலரங்கை இன்டர்நேஷனல் டெத் டவுலா அறக்கட்டளையின் நிறுவனர் தலைவர் டாக்டர் அபிஜித் டாம், எம் டி, எஃப் சி சி பி, எஃப் பி எம், எம் எஸ் இ.பால்மெட்., பி எச் டி மற்றும் அந்த அறக்கட்டளையின் நிறுவன செயலாளர் திரு. அவ்தார் சிங் சீமா ஆகியோர் தலைமையிலான குழுவினர் நடத்தினர். நோய்த்தடுப்பு மற்றும் தணிப்பு பராமரிப்பில் அவர்கள் கொண்டிருக்கும் சிறப்பான நிபுணத்துவமும், ஆழமான அர்ப்பணிப்பும் இந்த பயிலரங்கில் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் விலைமதிப்பற்ற நுண்ணறிவையும், வழிகாட்டுதலையும் வழங்கியது.

நோய்த்தடுப்பு மற்றும் தணிப்பு சிகிச்சையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற முழுமையான அணுகுமுறையைப் பற்றி பங்கேற்பாளர்கள் இப்பயிலரங்கில் அறிந்துகொண்டனர். தீவிர நோயின் அறிகுறிகள் மற்றும் அதனால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து நிவாரணம் பெறுவதற்கான வழிமுறைகளை இந்த அணுகுமுறை குறித்த தகவல்களும், பயிற்சியும் வழங்கின. ஒரு நபருக்கு இருக்கக்கூடிய உடல் சார்ந்த, உணர்வு சார்ந்த மற்றும் ஆன்மீகம் சார்ந்த தேவைகளை கண்டுணர்ந்து, அதற்கேற்ப அவரை கையாள்வதும், நடத்துவதும் எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை இப்பயிலரங்கு வலுவாக எடுத்துரைத்தது. வாழ்க்கையின் இறுதி காலத்தில் ஆதரவையும், கவனிப்பையும் வழங்கும் நபர்களுக்கு சுய-கவனிப்பின் முக்கியத்துவம் குறித்து பங்கேற்பாளர்களுக்கு தெளிவாக கற்பிக்கப்பட்டது; ஏனெனில், கவனிப்பையும், பராமரிப்பையும் வழங்கும் நபர்களது முழுமையான நலவாழ்வு, அவர்கள் வழங்குகின்ற தரத்தின் மீது நேரடி தாக்கத்தை கொண்டிருக்கிறது. இந்த பயிலரங்கு, துயரமான பயண தருணங்களை தனிநபர்கள் தைரியத்துடன் எதிர்கொள்வதற்கு உதவ அவர்களுக்கு நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை கற்பித்தது. துன்ப துயரங்களின் நிலைகளை நிலைகளைப் புரிந்துகொள்வது மற்றும் ஒவ்வொரு கட்டத்தின்போதும் தகுந்த ஆதரவை எப்படி வழங்குவது என்பது மீது குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டது. இறப்பை எதிர்கொள்வதற்கு உதவுகின்ற ஒரு நபரின் (டெத் டௌலா) அத்தியாவசிய செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் மிக ஆழமாக இப்பயிலரங்கில் ஆராயப்பட்டன. வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தை அமைதியாகவும், கண்ணியத்துடனும் முதியோர்களும், நோயாளிகளும் எதிர்கொள்வதை உறுதி செய்வதில் அவர்களை அன்புடனும், அக்கறையுடனும் கவனித்துக்கொள்ளும் நபர்கள் ஆற்றும் முக்கியப்பங்கு குறித்து இந்நிகழ்வு எடுத்துரைத்தது. சடங்குகளின் முக்கியத்துவம் மற்றும் இறக்கும் செயல்முறைக்கு ஒரு புனித இடத்தை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான ஆலோசனை குறிப்புகளும், உத்திகளும் இப்பயிலரங்கில் வழங்கப்பட்டன. உணர்வு ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான கவனிப்பை எப்படி வழங்குவது என்பது குறித்தும் இந்நிகழ்வில் ஆராயப்பட்டன. வாழ்க்கையின் இறுதிக்காலத்தின்போது கனிவான மற்றும் முழுமையான கவனிப்பையும், பராமரிப்பையும் வழங்குவதில் ஒரு முக்கிய பங்கை நோய்த்தணிப்பு பராமரிப்பு பிரிவு ஆற்றுகிறது. மூத்த குடிமக்களுக்கு வாழ்க்கை தரத்தை இன்னும் மேம்படுத்தி வழங்க வேண்டும் என்ற குறிக்கோளில் அதுல்யா சீனியர் கேர் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பிற்கு இந்நிகழ்வு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருந்தது. நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆதரவாக மருத்துவம், உளவியல் மற்றும் ஆன்மீகம் ஆகியவை சார்ந்த கவனிப்பை ஒருங்கிணைக்கின்ற பல துறைகளை உள்ளடக்கிய ஒரு அணுகுமுறையை நோய்த்தணிப்பு பராமரிப்பு பிரிவு வழங்குகிறது.

இப்பயிலரங்கின் வெற்றி குறித்து, அதுல்யா சீனியர் கேர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிறுவனர் திரு. சீனிவாசன் ஜி கூறுகையில், "நாங்கள், மிக உயர்ந்த தரத்தில் நோய்த்தணிப்பு மற்றும் வாழ்க்கையின் இறுதிக்கட்ட பராமரிப்பை வழங்குவதில் ஆழ்ந்த உறுதியுடன் இருக்கிறோம். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் இருப்பவர்களை கவனித்துக்கொள்ளும் நபர்களுக்கு அதற்குத் தேவையான திறமைகளையும், அறிவாற்றலையும் வழங்கி, வலுப்படுத்துவதற்காக இப்பயிலரங்கம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் இத்தகைய உற்சாகமான பங்கேற்பு இருப்பதை காண்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். பலரின் வாழ்க்கை மீது இப்பயிலரங்கில் பெற்ற உள்நோக்குகளும், கற்பிதங்களும் தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதுல்யாவில், வாழ்க்கையின் இறுதிக்கட்டமும், அதன் தொடக்கத்தைப் போலவே அழகானதாகவும், கண்ணியமானதாகவும் இருக்க வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். ஒவ்வொரு நபரும், அவர்களது வாழ்க்கையின் இறுதி நாட்களில் சிறப்பான கவனிப்பையும், மரியாதையையும் பெறுவதை உறுதி செய்வதற்கான இந்த செயற்பணியும் எமது நோய்த்தணிப்பு பராமரிப்பு துறை முக்கியப் பங்காற்றுகிறது." என்று கூறினார். முதியோர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள், உதவப்படும் வாழ்க்கை, நோய்த்தணிப்பு சிகிச்சை உட்பட பலதரப்பட்ட சேவைகளை வழங்குவதற்கான அதன் செயற்பணியில் அதுல்யா சீனியர் கேர் தொடர்ந்து வலுவான அர்ப்பணிப்பை கொண்டிருக்கிறது. முழுமையான நல்வாழ்வின் மீது சிறப்பு கவனத்துடன், கண்ணியம், வசதி மற்றும் அமைதியுடன் முதியவர்கள் வாழ்வதற்கு ஒரு உகந்த சூழலை வழங்குவதற்காக அதுல்யா முனைப்புடன் பணியாற்றி வருகிறது.